

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு–38 க்குட்பட்ட அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடத்தைப் பயன்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்தி.சினேகா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில், நேற்று (18.07.2025) முத்தமிழ்ப் பேரவை, திருவாடுதுறை டி.என். ராஜரத்தினம் கலை அரங்கில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற "தமிழ்நாடு நாள்" விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேருக்கு நிதியுதவி ஒப்பளிப்பு அரசாணையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.11.85 கோடி மதிப்பில் மருத்துவக் கட்டமைப்புகளுக்கு அடிக்கல்!

# திருவள்ளூர் மாவட்டத்தில் நகர்ப்புற சிறப்பு மருத்துவச் சேவை மையங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

திருவள்ளூர், ஜுலை 19-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (18.07.2025) திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவயால் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 202526 சட்டப்பேரவை அறிவிப் பின்படி, தமிழ்நாடு முழுவதும் 25 நகர்ப்புற சிறப்பு மருத்துவ சேவை மையங்கள் (poly clinic) திறந்து வைத்து, திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.11.85 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவ கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி, விழா பேருரையாற்றினார்கள்.

**25 நகர்ப்புற சிறப்பு மருத்துவ சேவை மையங்கள் (poly clinic) தொடக்கம்!**

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் தொடர்ந்து பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ச்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று கடந்த நிதிநிலை அறிவிப்பின்போது, தமிழ்நாடு முழுவதும் மாநகரப் பகுதிகளில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 25 இல் புதிதாக நகர்ப்புற சிறப்பு மருத்துவ புறநோயாளிகள் சேவை மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பொதுவாக நகர்ப்புற பகுதிகளில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓரிரு மருத்துவர்கள் மட்டுமே பணியில் இருப்பார்கள். மாலை 05 மணி வரை மட்டுமே மருத்துவ சேவை வழங்கப்படும். மருத்துவர்கள் Call on Duty என்கின்ற வகையில் அழைப்பின்பேரில் மருத்துவ சேவை வழங்குவார்கள். இத்தகைய மருத்துவமனைகளில் குறைந்த அளவிலான மருத்துவ சேவைகள் மட்டுமே கிடைக்கும். மாநகர, நகரப் பகுதிகள் என்பதால் அங்கு கூடுதலாக வேலைக்கு சென்றுவிட்டவர்கள் மாலையில் வருகின்ற போது அவர்களுக்கான மருத்துவ சேவை என்பது இல்லாத ஒரு சூழல் இருந்தது.

எனவே இதனை படிப்படியாக சரிசெய்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாடு முழுவதும் 108 இடங்களில் இது போன்ற நகர்ப்புற சிறப்பு மருத்துவ புறநோயாளிகள் சிறப்பு மையங்கள் ஏற்கெனவே தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைப் பொறுத்தவரை இன்று மிகச் சிறப்பாக இயங்கி கொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனையில் ஒவ்வொரு நாளும் மாலை 04.30 மணி முதல் இரவு 08.30 மணி வரை பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம், தோல் மருத்துவம், கண் மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம் என்று 8 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சை முறைகள் வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவர்களை இன்றைக்கு தனியாக நியமனம் செய்து அதற்கென்று 108 மையங்கள் மிகச் சிறப்பாக இயங்கி கொண்டிருக்கிறது. கடந்த நிதிநிலை அறிக்கையில் கூடுதலாக இன்னமும் 25 இடங்களில் நகர்ப்புற மருத்துவ புறநோயாளிகள் சிறப்பு மருத்துவ மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு இன்று திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து தொடங்கி வைக்கப்பட்டது.

**ரூ.11.85 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் !**

அதோடுமட்டுமல்லாமல் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.11.85 கோடி மதிப்பீட்டில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் குறிப்பாக ஆவடி, பொன்னேரி, திருவள்ளூர், திருத்தணி, கும்மிடிப்பூண்டி, பூவிருந்தவல்லி, மாதவரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் 14 இடங்களில் குறிப்பாக துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான கூடுதல் கட்டிடங்கள், செவிலியர் குடியிருப்பு, அலுவலர் குடியிருப்பு என்று 14 மருத்துவ கட்டமைப்புகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.சசிகாந்த் செந்தில், திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரன், ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆணையர் திருமதி.ரா.சரண்யா, துணை மேயர் எஸ்.சூரியகுமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், திருவள்ளூர் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா.பிரியாராஜ், பூவிருந்தவல்லி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பிரபாகர், ஆவடி மாநகராட்சி நல அலுவலர் மரு.ராஜேந்திரன் மற்றும் பொது சுகாதார கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 149 வது நாள்!

## திரு.வி.க.நகர் தெற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,ஜுலை.19-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 149 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (18.7.2025) திரு.வி.க.நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 76, வெங்கட்டம்மாள் சமாதி தெரு, (இந்திரா காந்தி சிலை அருகில்) 2) வட்டம் 76 அ சி.எஸ் நகர் குடியிருப்பு பெரம்பூர் பேரக்ஸ் ரோடு பட்டாளம் ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா. வீரமணி,

நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ் முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர். R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் சேர்க்கை! எழும்பூர் வடக்குப் பகுதி

# 99,99அ ஆகிய வட்டத்தில் பாகமுகவர்கள் - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆலோசனை வழங்கினார்!



சென்னை,ஜுலை.19-

மதுரை மாநகரில் ஜுன் 1 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளுக்காக

எழும்பூர் வடக்கு பகுதி 99,99அ ஆகிய வட்டத்தின் பி எல் ஏ 2, பி டி ஏ, பி ஒய் ஏ மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று (18.7.2025) மாலை 7.00, மணியளவில் சென்னை , புரசைவாக்கம், வெள்ளாளர் தெரு எஸ் எம் மஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, தொகுதி பார்வையாளர் பி.எம்.யாழினி, கோ.ஏகப்பன், தமிழன் பிரசன்னா, பரிதி இளம் சுருதி, வட்டக் கழக செயலாளர்கள் சி.சேகர்,ஆர்.எம்.ரங்கநாதன் மற்றும் பி எல் ஏ 2, பிடிஏ ,பி ஒய் ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில் – உள்ளாட்சித் துறை சார்பில் –

# 128 பயனாளிகளுக்கு ரூ.2.37 கோடியில் பல்வேறு பணிகளுக்கான ஆணைகள்!

## செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, ஜுலை 19 -

விழுப்புரம் மாவட்டம் ஊரக மற்றும் உள்ளாட்சி துறை சார்பில் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் கிராமப்புற விளிம்பு நிலை மக்களுக்காக கட்டப்பட்ட ஓட்டு வீடு சாய்தள கான்கிரீட்வீடுகளில் பழுது நீக்கம் மேற்கொள்ள இயலாத, முழுவதும் பழுதடைந்த வீடுகளை கண்டறிந்து இந்தவீடுகளை மீண்டும் கட்டிடும் நோக்கத்திற்காக நடப்பு ஆண்டில்முதலமைச்சரின்வீடுகள் மறு கட்டுமானத் திட்டத்தின் கீழ்இரண்டாம் கட்டமாக பயனாளிகளுக்கு பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் சீத்தாலட்சுமி அனைவரையும் வரவேற்றார்.வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கூடுவாம்பூண்டி, தாயனூர், தொரப்பாடி, கோட்டப்பூண்டி, அவலூர்பேட்டை,சாத்தாம்பாடி உள்ளிட்ட 12 ஊராட்சிகளை சேர்ந்த 40பயனாளிகளுக்கு 96லட்சம் ரூபாய்மதிப்பீட்டில் வீடுகள் புனரமைப்பதற்கான உத்தரவினையும்,

1 கோடியே 22 லட்சத்து 58 ஆயிரம் மதிப்பீட்டில் 24 மலைவாழ்மக்களுக்கு ஜன்மன் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான உத்தரவு என மொத்தம் 64பயனாளிகளுக்கு2 கோடியே 18 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்வீடுகள் கட்டுவதற்கான உத்தரவினை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றியசெயலாளர் சாந்தி சுப்ரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,ஒன்றிய கவுன்சிலர்கள் யசோதரை சந்திர குப்தன், சக்தி, ஒன்றிய பொறியாளர் நாராயணசாமி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்சிவகாமசுந்தரி, ஊராட்சி மன்ற தலைவர்கள் செல்வம், லாவண்யா ராஜேஷ்வரன், நிர்வாகி கள் எஸ்.பி. சம்பத், சரவணன்,குமார், தோப்பு சம்பத், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மணிவண்ணன்,இளைஞர் அணி நிர்மல்ராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கலா அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தமிழ்நாட்டில் மேலும் ரூ.450 கோடி முதலீடு!

## 'சியட்' டயர் தயாரிப்பு நிறுவனம் அறிவிப்பு!

சென்னை, ஜுலை 19 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு வெளிநாட்டு முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் போட்டி போட்டு கொண்டு முதலீடுகள் செய்து வருகின்றன. இதன் காரணமாக, இந்தியாவிலேயே தமிழ்நாடு தொழில்துறையில் முதலிடத்தில் திகழ்கிறது.

இந்நிலையில், வாகனங்களுக்கான டயர் தயாரிக்கும் முன்னணி நிறுவனமான சியட், தமிழ்நாட்டில் மேலும் முதலீடு செய்வதாக அறிவித்துள்ளது.

அதன்படி, திருப்பெரும்புதூரில் உள்ள தனது ஆலையை 450 கோடி மதிப்பில் விரிவாக்கம் செய்ய உள்ளதாக சியட் டயர் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஸ்ரீபெரும்புதூர் ஆலையில் ஆண்டுக்கு 70 லட்சம் டயர்கள் உற்பத்தியாகும் நிலையில், மேலும் அதிகப்படுத்த சியட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சியட் உற்பத்தி ஆலையின் இந்த விரிவாக்கம் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் 2027 ஆம் ஆண்டுக்குள், கார்களுக்கான உதிரிபாகங்களை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் 'சியட்' நிறுவனம் கூறியுள்ளது.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஆர்கே பேட்டை கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் வாக்குச்சாவடி எண் 133. ஈஸ்வரன் கோவில் தெருவில் ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் பா.சம்பத், ஏற்பாட்டில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம். எல். ஏ. வீடு வீடாகச் சென்று கழக ஆட்சியின் சிறப்பு திட்டங்களை எடுத்து கூறி உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபட்டார்கள். உடன் ஜி.சித்திக் அலி, எஸ். குமரன், எம்.நாகப்பன், ஏ.கே. திருவேங்கடம், சி. சுப்பிரமணி, எஸ். மாத்தையா, ஜெகன், சரவணன், ரவி, சதீஷ், டில்லி, மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, 128வது வார்டில் பணிபுரியும் மாநகராட்சி சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள், புதிய சீருடைகள் அடங்கிய தொகுப்பை மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் வழங்கினார். உடன் சுகாதார ஆய்வாளர் மற்றும் ஊழியர்கள் உள்ளனர்.